**த. நா.ச.பே. எண் : 040** **நாள் : 03.07.2018**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110—ன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி**
அவர்களின் அறிக்கை— 3.7.2018

---

## வணிகவரி மற்றும் பதிவுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வந்துள்ளது. அதன் அடிப்படையில், **வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 10 சார்பதிவாளர் அலுவலகங்கள், நவீன வசதிகளுடன் கூடிய அலுவலகங்களாக 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்** என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

**1)** மத்திய அரசு ஆண்டுதோறும் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய சமூகத்தினருக்கு மானியம் அளித்து வந்தது. இந்த மானியத்தை 2018ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுத்தியுள்ளது. இந்துக்களுக்கு மானசரோவர் மற்றும் முக்திநாத் செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், சிறுபான்மை இன மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கிறிஸ்தவர்களுக்கு

ஜெருசலம் செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 6 கோடி ரூபாய் மானியம் வழங்கும். இத்திட்டத்தின் கீழ் 3,728 நபர்கள் இந்த ஆண்டு (2018–19) ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வர் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2) மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் 502 பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளில் 31,940 மாணவியர் தங்கிப் பயின்று வருகின்றனர். இவர்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு, இவ்விடுதிகளின் நான்கு பகுதிகளிலும், விடுதி ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவில் 502 விடுதிகளுக்கும் 5 கோடியே 2 லட்சம் ரூபாய் செலவில் CCTV Camera பொருத்தப்படும்.

3) தமிழ்நாடு முழுவதும் மொத்தம் உள்ள 1,343 விடுதிகளில் 1,265 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவ்வாறு சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரும் 1,265 விடுதிகளில், சுமார் 595 விடுதிகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படையில், நடப்பாண்டில் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இவ்விடுதிகளில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

4) மதுரை மாவட்டத்தில் மதிப்பனூர் மற்றும் மேலத் திருமாணிக்கம், தேனி மாவட்டத்தில் மு.பெருமாள்பட்டி மற்றும் பாலார்பட்டியில் உள்ள 4 அரசு கள்ளர் தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும்;

மதுரை மாவட்டத்தில் கொ.புளியங்குளம், அ.புதுப்பட்டி மற்றும் வி.பெருமாள்பட்டி ஆகிய 3 அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்;

தேனி மாவட்டம்–அன்னஞ்சி, திண்டுக்கல் மாவட்டம்–தெப்பத்துப்பட்டி மற்றும் மதுரை மாவட்டம்–கோவிலாங்குளம் ஆகிய 3 அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், என மொத்தம் 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் 3 கோடியே 8 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்.

1. கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் முதற்கட்டமாக, 25,000 கட்டுமான தொழிலாளர்களுக்கு தலா 2,000/– ரூபாய் மதிப்புள்ள பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகம் 5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். இப்பெட்டகத்தில் பாதுகாப்பு காலணிகள், பாதுகாப்பு தலைகவசம், பளிச்சிடும் மேலங்கி, கையுறைகள் மற்றும் பாதுகாப்பு கண்ணாடிகள் இருக்கும்.

2. கோவையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகங்களுக்கு 4 கோடியே 3 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

3. தமிழ்நாட்டில் தற்போது உள்ள 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 29 அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில், கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் தலா 1 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

4. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலமாக 32 மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு திறன்பயிற்சி திட்டங்களை, தற்போது 5

மண்டல இணை இயக்குநர்கள் கண்காணித்து வருகின்றனர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்களை திறம்பட நிர்வகிக்கவும், கண்காணிக்கவும், விழுப்புரம் மற்றும் சேலம் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகங்கள் நடப்பாண்டில் 2 கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

5. அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு 7 கோடி ரூபாய் செலவில் "சிடி ஸ்கேன் கருவி" வழங்கப்படும். ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் 3 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் அவசர சிகிச்சைப் பிரிவு (ICU) உருவாக்கப்படும். 75 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் உள்ள ஆய்வகங்களில் 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் "செமி ஆட்டோ அனலைசர், பைனாகுலர் மைக்ராஸ்கோப், இசிஜி இயந்திரம்" போன்ற புதிய உபகரணங்கள் வழங்கப்படும். தொழிலாளர்களுக்கு சிகிச்சைக்காக வழங்கப்படும் உயர் மருந்துகளை பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் 4 மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகங்களில் குளிர்சாதன அறை மற்றும் ஜெனரேட்டர் கருவிகள் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**